**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண்.145/2024

பெயர்:– சின்னுசாமி நாள்:03.02.2026

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை :– (வாதி தரப்பில்)

நான் வாதிக்கு எவ்வளவு நாட்களாக பழக்கம், நட்பு என்றால் 5,6 வருடங்களாக நட்பு. அவர் எனது ஊரில் இருந்து எவ்வளவு தூரத்தில் வசிக்கிறார் என்றால் ஒரு பர்லாங்கு இருக்கும். வாதியை சின்ன வயதில் இருந்தே எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி விவசாயம் செய்கிறாரா என்றால் ஆமாம். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் கமிஷன் ஏஜென்டாக உள்ளேன். கொடுக்கல், வாங்கல் எனது வாழ்க்கையில் இருந்துள்ளது என்றால் அப்படி எதுவும் இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சொசைட்டி, வங்கியில் ஏதேனும் கடன் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் பூமி எதாவது கிரையம் பெற்றேனா என்றால் வாங்கியுள்ளேன். இரண்டு பேரும் சேர்ந்து கூட்டாக வாங்கியுள்ளோம். வாதியும், நானும் சேர்ந்து வாங்கிய கிரையத்திற்கு தனித்தனி ஆவணம் ஏற்படுத்தப்பட்டதா என்றால் இல்லை. ஒரே பத்திரம் ஏற்படுத்தப்பட்டு ஒரு நகலை நான் பெற்றுள்ளேன். எவ்வளவு தொகைக்கு கிரையம் பெற்றோம் என்றால் ரூ.10,00,000/– அல்லது ரூ.12,00,000/– இருக்கும். நான் எவ்வளவு தொகை போட்டேன் என்றால் வாதி 2 பங்கு நான் ஒரு பங்கு. நான் கிரையம் கொடுப்பதற்கு முன்பே வாதி அவரது பாகத்தை கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் ஆமாம். பொதுவில் உள்ள பாகத்தை கிரையம் கொடுத்துவிட்டாரா என்றால் ஆமாம். பொதுவில் உள்ள பாகத்தை 3ம் நபருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், அந்த பாகத்தை எனக்கே கிரையம் கொடுக்க வேண்டும் என்று சட்டப்பூர்வமான நடவடிக்கை வாதி மீது எடுத்தேனா என்றால் இல்லை. தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் மற்றும் காசோலை என்னுடையதுதான் என்றால் சரிதான். இந்த காசோலை சம்பந்தமாக வாதி ஏற்கனவே நீதித்துறை நடுவர் விரைவு

## Copy of Deposition

நீதிமன்றம் எண்.2 ல் சுருக்கு வழக்கு எண்.205/2022 என்ற வழக்கை என்மீது தாக்கல் செய்தார் என்றால் சரிதான். காசோலையை நான் தரவில்லை. என் வீட்டில் இருந்து வாதி எடுத்து சென்றுவிட்டார். என்னிடம் காட்டப்படுவது மேற்படி வழக்கின் தீர்ப்புரை இணைய நகல் என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் வா.த.சா.ஆ.6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** அந்த வழக்கில் அசல் காசோலை தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது அசல் காசோலை நகல் வா.த.சா.ஆ.1 ஆவணம் என்றால் சரிதான். சுருக்கு வழக்கு எண்.205/2022 ன்படி முழு விசாரணைக்கு பின்னிட்டு 25.04.2024ம் தேதி அன்று என்னை குற்றவாளி என தீர்மானித்து 3 மாதங்கள் மெய்காவல் சிறை தண்டனையும், காசோலை தொகையான ரூ.3,50,000/-த்தை இழப்பீடாக வாதிக்கு தரவேண்டும் என்று தீர்ப்பு பகரப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் என்ன எதிர் வாதம் செய்தேனோ அந்த வழக்கிலும் அதே எதிர் வாதத்தைதான் முன் வைத்தேன் என்றால் சரிதான். அந்த காசோலை வா.த.சா.ஆ.2ன் படி போதுமான பணம்இல்லை என்று திருப்பப்பட்டது என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. நான் கூட்டாக கிரையம் வாங்கியதாகவும், பாகம் பிரிக்காமல் விற்பனை செய்ததாக ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் எழுத்துபூர்வமான ஆவணம் இல்லை, வாய்மொழியாக பிரித்து கொள்ளலாம் என்று சொன்னேன். அந்த சொத்தையும் நான் பிரிக்காமல் விற்றுவிட்டேன் என்றால் இல்லை. அந்த சொத்து என்னிடம்தான் உள்ளது. வாதியிடம் இருந்து கிரையம் வாங்கியவரிடம் பாகத்தை பிரித்து கொள்ளலாம் என்று நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நேற்றுகூட வாய்மொழியாக பேசினோம். இந்த பூமி சம்பந்தமாக விரோதத்தை தவிர வாதி மீது வேறு எந்த தகராறும் இல்லை என்றால் சரிதான். காசோலை வாதி எடுத்து சென்றதற்கான சட்டப்பூர்வ நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் ஆன்லைன் மனு காவல்துறையில் நேரடியாக புகார் செய்தேன். அந்த ஆன்லைன் புகார் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. தாக்கல் செய்யவில்லை. அதற்கு காரணமே அதுபோல் ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றும், இந்த வழக்கிற்காக நான் அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் பேச்சு வார்த்தை நடத்தினார்கள், சரிவராததால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ள

சொன்னார்கள். காவல்நிலையத்தில் பேசிய பின்னிட்டு தான் எனக்கு ஈரோடு நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்தது என்றால் சரிதான். வழக்கு 1 1/2 ஆண்டுகளாக நடந்தது. வேறு எந்த விரோதமும் வாதியிடம் இல்லாத காரணத்தினால் சட்டப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றும் அதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. இது தவிர வாதிக்கு எத்தனை ஏக்கர் பூமி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வாதியிடம் வருமான வரி அட்டை, வரவு, செலவு பட்டியல் மற்றும் ஆதார் அடையாள அட்டை ஆகியவற்றை பதில் அறிவிப்பில் கோரியிருப்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் அனுப்பியுள்ள பதில் அறிவிப்பில் நாங்கள் கூட்டாக வாங்கிய சொத்தில் பாகம் பிரிப்பது சம்பந்தமாக எனக்கும், வாதிக்கும் விரோதம் ஏற்பட்டது என்ற விவரத்தை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் அடிக்கடி காசோலை மூலமாக வரவு, செலவு செய்வேனா என்றால் செய்வதில்லை. நான் காசோலை எப்போதும் கைவசம் தயாராக வைத்திருப்பதில்லை என்றால் பள்ளிக்கு தேவை என்பதால் வீட்டில் தயாராக வைத்திருந்தேன். நான் லாரியில் அடிக்கடி வெளியூர் சென்றுவிடுவேன். குழந்தைகளுக்கு பள்ளிக்கட்டணம் செலுத்துவதற்காக காசோலையை வீட்டில் வைத்திருந்தேன். நான் காசோலை மூலமாக வரவு, செலவு செய்வதில்லை என்றும், பள்ளிக்கட்டணம் செலுத்துவதற்காக வீட்டில் காசோலை வைத்திருந்தேன் என்று முன்னுக்கு பின் முரணாக கூறுவதில் இருந்தே நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பது தெளிவாகிறது என்றால் சரியல்ல. நான் பிராதில் கூறியுள்ளது போல் 05.08.2021ம் தேதி அன்று வாதியிடமிருந்து ரூ.3,50,000/- குடும்ப செலவிற்காக கடன் பெற்றேன் என்றும், அதற்காக 12%வட்டியுடன் வாதிக்கு செலுத்தி விடுவதாக கூறி உறுதியளித்து 05.10.2021ல் செலுத்தி விடுவதாக கூறி அதை தீர்ப்பதற்காக இந்த வழக்கு காசோலையை வாதியிடம் கொடுத்து நான் கொடுத்த உறுதி மொழியின் பேரில் அதை வசூலுக்கு தாக்கல் செய்து தொகை இல்லாமல் திரும்பி வந்ததன் காரணமாக காசோலை மோசடி வழக்கும், இந்த வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அது பொய். நான் செய்த எதிர் வாதம் அனைத்தும் பொய்யானது என்பதால்தான் ஏற்கனவே என்னை ஈரோடு குற்றவியல் நடுவர் விரைவு நீதிமன்றம்

## Copy of Deposition

எண்.2ல் தண்டிக்கப்பட்டேன் என்றால் அந்த தீர்ப்பை பொறுத்து மேல்முறையீடு செய்துள்ளேன். நான் மேல் முறையீட்டு நகல் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே தாவாவில் வாதி கோரியுள்ள தொகையை நான் செலுத்த கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல. எனவே வாதி கோரியுள்ளபடி செலவு தொகையுடன் தீர்ப்பு செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.02.03 14:09:32 +0200<br><br>Subordinate Judge,<br>Kodumudi |